**செய்தி வெளியீடு எண்: 902** **நாள்: 11.12.2018**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (11.12.2018) தலைமைச் செயலகத்தில், தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் சென்னை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் முதுகலை தமிழ் பயிலும் மாணவர்களுக்கு மாதந்தோறும் 2000 ரூபாய் உதவித் தொகை வழங்கும் திட்டத்தை துவக்கி வைத்தார்கள். மேலும், முனைவர் மு. தமிழ்க்குடிமகன், திரு. மேலாண்மை பொன்னுச்சாமி மற்றும் முனைவர் பொன். சௌரிராசன் ஆகிய தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுமை செய்யப்பட்டு அவர்களது குடும்பத்தினருக்கு அதற்கான பரிவுத் தொகையை வழங்கி, திருவள்ளுவர் கால எழுத்தில் திருக்குறள்' என்ற நூலினை வெளியிட்டார்கள்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் முதுகலை தமிழ் (M.A.) பயிலும் மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில், இவ்வாண்டு முதல் ஆண்டுதோறும் தெரிவின் அடிப்படையில் முதலாம் ஆண்டு பயிலும் 15 மாணவர்கள், இரண்டாம் ஆண்டு பயிலும் 15 மாணவர்கள், என மொத்தம் 30 மாணவர்களுக்கு மாதந்தோறும் கல்வி உதவித் தொகையாக தலா 2,000/- ரூபாய் வழங்கப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 28.6.2018 அன்று சட்டப்பேரவை விதி எண் 110—ன் கீழ் அறிவிப்பு வெளியிட்டார்கள்.

அதன்படி, 2018—19ஆம் கல்வியாண்டில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் முதலாமாண்டு முதுகலைத் தமிழ்ப் பயிலும் மாணவர்களுள் தெரிவு செய்யப்பட்ட 15 மாணவர்களுக்கு கல்வித் தொகையாக மாதந்தோறும் 2000 ரூபாய் வழங்கும் திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று துவக்கி வைத்து, மாணவர்களுக்கு காசோலைகளை வழங்கினார்கள்.

மேலும், தமிழ் வளர்ச்சித் துறையின் 2018—19ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில், முனைவர் மு. தமிழ்க்குடிமகன், திரு. மேலாண்மை பொன்னுச்சாமி மற்றும்

முனைவர் பொன். சௌரிராசன் ஆகிய தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு அவர்களின் குடும்பத்தினருக்கு அதற்கான பரிவுத் தொகை வழங்கப்படும் என்ற அறிவிப்பிற்கிணங்க, முனைவர் மு. தமிழ்க்குடிமகன், திரு. மேலாண்மை பொன்னுச்சாமி மற்றும் முனைவர் பொன். சௌரிராசன் ஆகிய தமிழறிஞர்களின் குடும்பத்தினருக்கு 25 லட்சம் ரூபாய்க்கான பரிவுத் தொகையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று வழங்கினார்கள்.

திருவள்ளுவர் வாழ்ந்த காலத்தில் தமிழ்நாட்டில் வழக்கத்தில் இருந்ததாக தொல்லெழுத்து ஆய்வாளர்களால் தெரிவிக்கப்படும் தமிழ்பிராமி என்ற எழுத்தில் தான் திருக்குறள் எழுதியிருக்க வேண்டும் என்ற அடிப்படையில், சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தால் தமிழ்பிராமி எழுத்தில் அணியமாக்கப்பட்டுள்ள **‘திருவள்ளுவர் கால எழுத்தில் திருக்குறள்’** என்ற நூலினையும் வெளியிட்டார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் திரு.க.பாண்டியராஜன், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் திரு. இரா. வெங்கடேசன், இ.ஆ.ப.,, தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் மற்றும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநர் (பொறுப்பு) முனைவர் கோ. விசயராகவன், மொழிபெயர்ப்புத் துறை இயக்குநர் முனைவர் ந. அருள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 11.12.2018.**